# சீ.எஸ்.ஐ.ஆர் — 800 செயல் திட்டம்

## @

## சீ.எஸ்.ஐ.ஆர் — மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம் — காரைக்குடி.



**மனித நேயத்துடன் அறிவியல்**

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்ட ஏழை மக்களின் எதிர்பார்ப்புகளை அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் வாயிலாக அறிந்து நிறைவேற்றுதல்.

## சீ.எஸ்.ஐ.ஆர் — கிராமப்புற மேம்பாட்டிற்கான சீ.எஸ்.ஐ.ஆர்—ன் அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள்.

“பசி மற்றும் வறுமை பிரச்சினைகளுக்கு அறிவியலால் மட்டுமே தீர்வு காண முடியும்”.

— பண்டித ஜவஹர்லால் நேரு.


- எப்பொழுதுமே ஒரு நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய உந்துசக்தியாக அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் செயல்பட்டு வருகிறது.
- சீ.எஸ்.ஐ.ஆர் நிறுவனம் சாதாரண மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் விதமான தொழில் நுட்பங்களைக் கண்டுபிடித்து வளர்த்துக் கொடுப்பதில் நீண்ட காலமாக ஈடுபட்டுள்ளது.



சூரிய ஆற்றலால் இயங்கும் உந்து வாகனம் (ரிக்ஷா)



திருத்தி அமைக்கப்பட்ட பொறியியல் பொழிவுடன் பாம்பன் இரயில் பாலம்




ஆந்திர மாநிலம் காக்கி நாடாவில் கோதாவரி உரத் தொழிற்சாலையில் தினம் 1.2 இலட்சம் லிட்டர் சூரிய ஆற்றலால் இயங்கும் சுடுகலன்



சூரிய ஆற்றலால் இயங்கும் மின்னாற்பகுப்பு முறையில் புளோரினை நீக்கும் தொழில் நுட்பம் சோலார் — எலக்ட்ரோ டிப்புளோரிடேசன்




பயோ டீசலில் செயல்படும் ட்ராக்டர்கள்



100 எல்பிடி செராமிக் வடிகட்டி கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையம்




டெராஃபில் பயன்படுத்திய குடிநீர்



கடற்கரை பகுதிகளில் தரமான மற்றும் மேம்படுத்தப்பட்ட உப்பு உற்பத்திக்கான தொழில் நுட்பம்.



சமாதான் கேந்திரா

இந்தியாவின் உண்மையான அடையாளம் அதன் ஒரு சில நகரங்களில் காணப்படும் வளர்ச்சியால் அறியப்படுவதில்லை. மாறாக இந்தியாவின் முக்கிய அங்கமான ஏறத்தாழ ஏழு இலட்சம் கிராமங்களின் மூலமாகவே அறியப்படுகிறது. ஆகவே கிராமங்கள் முன்னேறினால் மட்டுமே இந்தியா முன்னேறும். — மகாத்மா காந்தி

கிராமங்களில் ஏழை மக்களின் வறுமையை ஒழித்து அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அவர்களின் செயல் திறன் மற்றும் வருமானத்தை உயர்த்தும் சீரிய திட்டங்களால் மட்டுமே முடியும் என்ற நம்பிக்கையில் உருவாக்கப்பட்டது தான் சீ.எஸ்.ஐ.ஆர் — 800 சமூகத்திட்டம்.

**<u>தேசிய அளவில் சீ.எஸ்.ஐ.ஆர் — 800ன் குறிக்கோள்:</u>**

நம் நாட்டின் பொருளாதார ரீதியில் நலிவடைந்த 1 மில்லியன் ஏழை மக்களின் வருவாய் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு நாட்டின் பிற பகுதிகளிலும் இந்த திட்டங்களை செயல்படுத்துதல்.

**<u>மத்திய மின் வேதியியல் ஆய்வகத்தின் சீ.எஸ்.ஐ.ஆர் -800க்கான குறிக்கோள்:</u>**

- இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 40,000 கிராம மக்களின் வருவாயை உயர்த்தி அதன் வாயிலாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். மேலும், இத்தகைய மாதிரித் திட்டத்தை தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளிலும் செயல்படுத்துதல்.
- மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு சீ.எஸ்.ஐ.ஆர் அல்லது சீ.எஸ்.ஐ.ஆர் அல்லாத பிற அறிவியல் நிறுவனங்களிலிருந்து கீழ்க்குறிப்பிட்டுள்ள துறை சார்ந்த புதுமையான அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துதல்.

1. எளிய சுகாதார நடைறை
2. மின் சக்தி மற்றும் பிற சக்திகளின் ஆக்க வினைத்திறன்.
3. குறைந்த செலவில் வீடுகள் மற்றும் போக்குவரத்து வசதிகள்
4. மதிப்பு கூட்டிய விவசாயம்
5. தொடர்ந்து கிடைக்கும் சக்தி
6. உபயோகப்படுத்தக்கூடிய நீர் மற்றும்
7. கழிவிலிருந்து பயன்பாட்டுக்கு உகந்த பொருட்களை உருவாக்குதல்

**<u>செயல்பாதை</u>:**

இந்த செயல்திட்டம் வாயிலாக கிராமப்புற ஏழை மக்களின் செயல் திறனை உயர்த்தும் வகையில் "கிராம விஞ்ஞான குடில்" எனும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்பு கிராமங்களில் தேவையான தொழில் நுட்பங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டு சாதாரண கிராமங்கள் கூட தொழில் நுட்பத்தால் வளர்ச்சியடைந்த கிராமங்களாக மேம்படுத்தப்பட்டு, மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்த்தப்படும்.

**செயல்முறை:**

1. மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக பிற்படுத்தப்பட்ட கிராமங்களைக் கண்டறிதல்.
2. கிராமங்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைப்பாடு, இயற்கை வளம், அடிப்படை வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தொடக்க நிலை டெக்வில் தகவல்களை சேகரித்தல்.
3. குறிக்கோளை அடைய சீ.எஸ்.ஐ.ஆர் அல்லாத என்.ஜீ.ஓ—க்கள், மாவட்ட நிர்வாகம், அப்பகுதியில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் செயல்பாடுகளில் பங்கேற்றல்.
4. மேற்கூறிய முதல் கட்ட தகவல்களின் அடிப்படையில் கிராமங்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சீ.எஸ்.ஐ.ஆர்—ன் கீழ் உள்ள 37 பலதரப்பட்ட ஆய்வகங்களிலிருந்து பெற்ற தொழில் நுட்பங்களைக் கொண்டு, தெரிவு செய்து தேவையின் அடிப்படையிலான மதிப்பீட்டு ஆய்வு செய்தல்.
5. பெங்களூரில் அமைந்துள்ள தேசிய ஏரோநாட்டிகில் ஆய்வகத்தில் செயல்படும் சீ.எஸ்.ஐ.ஆர் — 800 செயல் திட்ட கூட்டுக்குழுவின் வளர்ச்சியை கவனித்தல் மற்றும் தேவையான திருத்தங்களுடன் கூடிய நடவடிக்கைகளை அமுல்படுத்துதல்.

**இதுகாறும் கண்ட வளர்ச்சி:**

➢ சீ.எஸ்.ஐ.ஆர் — 800 செயல்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த 35 கிராமங்களை கண்டறிந்திருக்கிறோம்.

**சீ.எஸ்.ஐ.ஆர் — 800—ன் கீழ் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பகிர்மானத்திற்காக தேர்வு செய்யப்பட்ட கிராமங்களின் பட்டியல் வருமாறு:**

| **சிவகங்கை மாவட்டம்** | **இராமநாதபுரம் மாவட்டம்** | | |
|---|---|---|---|
| **இளையான்குடி** | **மண்டபம்** | **கடலாடி** | **போகலூர்** |
| அரண்மனைகரை<br>ஆலவிடங்கான்<br>கட்டனூர்<br>கலங்கத்தான் கோட்டை<br>சூராணம்<br>தகவூர்<br>உதயனூர்<br>வண்டல்<br>விாயத கண்டன்<br>விஷ்வனூர் | செம்படையான் குளம்<br>கீழநாச்சி<br>தெற்போகி<br>கும்பரம்<br>கரண்<br>இருமேனி<br>சத்தொன்வளசை<br>கொரவள்ளி<br>மன்னன்குடி<br>நொச்சியூரணி | கீளசெல்வனூர்<br>பி.கிரந்தை<br>கீழக்கிடாரம்<br>எஸ்.கிரந்தை<br>கடுகு சந்தை<br>பிள்ளையார் குளம்<br>அவதாண்டை<br>ஏனாதி<br>மாரந்தை<br>மங்களம் | போகலூர் (GVK)<br>பொட்டிகட்டி<br>பாண்டி கண்மாய்<br>முத்து வயல் |

கூகுள் இணையதளம் மூலமாகப் பார்த்த டெக்வில் கிராமங்களின் வரைபடம்.

Google Earth Imagery showing the techvil




- இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள “டெக்வில்” கிராமங்களிலிருந்து தொடக்கநிலை தகவல்கள் பெறப்பட்டுள்ளன.
- இராமநாதபுரம் மாவட்டம், போகளூரில் கட்டப்பட இருக்கும் கிராம விஞ்ஞான குடிரை (GVK) மையமாகக் கொண்டு டெக்வில் கிராமங்களில் சேவை நடைபெறும். இதற்காக மாவட்ட நிர்வாகம் போகலூர் பஞ்சாயத்து யூனியனில் கிராம விஞ்ஞான குடில் அமைப்பதற்காக அரை ஏக்கர் நிலத்தை ஒதுக்க இசைந்துள்ளது. இதில் கிராம ஏழை மக்களுக்கு, கிராமப்புற தொழில் முனைவோருக்கான பயிற்சி அளிக்கப்படும்
- கிராம விஞ்ஞான குடிர் (GVK) அமைப்பதற்காக தென் தமிழகத்தில் உள்ள பொறியியற் கல்லூரிகளில் வடிவமைப்புக்கான போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்படும் மிகச் சிறந்த வடிவமைப்பை நம்மிடம் இருக்கும் இயற்கை மற்றும் மனித வளத்துடன் இணைத்து நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.
- வடிவமைப்பு வரைபடம் மற்றும் மாதிரி தயாரிப்பதற்கும் மற்றும் கிராம விஞ்ஞான குடில் நிர்மானிப்பதற்கும் திருச்சியில் உள்ள தேசிய தொழில் நுட்ப நிறுவனம் மட்டுமல்லாது மாவட்ட நிர்வாகத்தில் உள்ள நீர் வளத்துறை, தொழில் வள நிறுவனம், பஞ்சாயத்து அலுவலகம், அரசு மான்யம் பெற்ற என்.ஜி.ஓக்கள், மகளிர் திட்டம் முதலிய துறைகளுடன் தொழில்சார் தொடர்புறவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் தகவல்கள் அறிய: டாக்டர்.வி.வி.கிரிதர், மூத்த தலைமை விஞ்ஞானி மற்றும் செயல் திட்ட ஒருங்கிணைப்பாளர். சீ.எஸ்.ஐ.ஆர் — 800 செயல்திட்டம்.

சீ.எஸ்.ஐ.ஆர் — மத்திய மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம் — காரைக்குடி—6,
சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு, தொலைபேசி – 04565—241483, மின் அஞ்சல் — giridharvv@gmail.com/giridharv@cecri.res.in